RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20212

# பண்பாட்டு சூழலியல் நோக்கில் சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்கள்

## லோ. இளஞ்செழியன் [அ,*]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Ecology views in Sangam Literature

## L. Elanchezhiyan [a,*]

[a] Department of Tamil, Government arts college, Coimbatore-641018, Tamil Nadu, India.

Corresponding Author:
osaichezhiyan@gmail.com

Received : 29-01-2020
Accepted : 28-02-2020

### ABSTRACT

The human race, a component of nature, has begun to experience the opposite effect as a reaction to the domination of nature. The modern society, which is endangering the dangers of global warming and climate change, has just begun to express its concern for nature. This is why the modern concept of ecology is gaining more attention. The concept of ecology is now a matter of debate, rather than a defence of nature, of human self-defence. It is only by understanding nature and living on it that the human race can establish its presence in this global sphere. "Man is a social animal. He responds directly to the environment through his actions and changes not only his way of life but also the way of life of all living things" In his book Theory of cultural change 1955 by Julian Stewart. Ecology Review is a study that combines scientific theoretical environment and literature with language and biological theories. Nature has a great influence on us as a living substance and when we misuse it, it brings us great danger. All Tamil ancient life in the academy is seen as ecological. The following nattrinai poems describe how the people of the Sangam era had an understanding of nature.

**Keywords:** Sangam literature, Sangam era, Cultural ecology, Ecology, Nature conservation, Tamil literature, Theory of cultural change, Julian Stewart

## கட்டுரைச் சுருக்கம்

இயற்கையின் ஒரு கூறான மனித இனம் தொடர்ந்து இயற்கையின் மீது செலுத்தி வரும் ஆதிக்கத்தின் வினையாக எதிர் விளைவுகளை சந்திக்க தொடங்கியுள்ளது.காலநிலை மாற்றங்களால் பெரும் ஆபத்துகளை சந்தித்து வரும் சமூகம் தற்போது தான் இயற்கையின் மீதான கவனிப்பை வெளிப்படுத்த தொடங்கியிருக்கிறது. அதன் காரணமாகவே சூழலியம் என்ற சிந்தனைப்போக்கு அதிக கவனம் பெற்று வருகின்றது. இயற்கையை புரிந்து கொள்வதன் மூலமும் அதனை சார்ந்து வாழ்வதன் மூலமும் மட்டுமே மனிதஇனம் இந்த புவிக்

கோளத்தில் தன் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள இயலும். சங்க இலக்கிய அகப்பாடல்களில் தமிழர் வாழ்வு அனைத்தும் சூழல் அடிப்படையில் நிகழ்ந்ததாக காணமுடிகிறது. பின்வரும் நற்றிணைப் பாடல்கள் சங்க காலத்து மக்கள் இயற்கையோடு எத்தகைய புரிதலை கொண்டிருந்தனர் என்பதை விவரிக்கின்றன. அந்த வகையில் சங்க இலக்கிய நற்றிணைப் பாடல்கள் பண்பாட்டு சூழலியல் நோக்கில் மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன.

## முன்னுரை

இயற்கையின் ஒரு கூறான மனித இனம் தொடர்ந்து இயற்கையின் மீது செலுத்தி வரும் ஆதிக்கத்தின் வினையாக எதிர் விளைவுகளை சந்திக்க தொடங்கியுள்ளது. உலக வெப்பமயமாதல், பெருமழை என காலநிலை மாற்றங்களால் பெரும் ஆபத்துகளை சந்தித்து வரும் நவீன சமூகம் தற்போது தான் இயற்கையின் மீதான கவனிப்பை வெளிப்படுத்த தொடங்கியிருக்கிறது. அதன் காரணமாகவே சூழலியம் என்ற நவீன சிந்தனைப்போக்கு அதிக கவனம் பெற்று வருகின்றது. இயற்கையின் மீதான பாதுகாப்புணர்வு என்பதைக்காட்டிலும் மனிதனின் தற்காப்புணர்வின் வெளிப்பாடாகவே தற்போது சூழலியம் என்ற சித்தாந்தம் விவாதப்பொருளாகியுள்ளது. இயற்கையை புரிந்து கொள்வதன் மூலமும் அதனை சார்ந்து வாழ்வதன் மூலமும் மட்டுமே மனிதஇனம் இந்த புவிக் கோளத்தில் தன் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள இயலும்.

பொருள்மையவாத மீநுகர்வு பண்பாட்டுத்தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நாம், இயற்கை மைய வாழ்வியல் பண்பாட்டு கூறுகளை அறிய வேண்டுமெனில் சங்க இலக்கியத்தின் வாயிலாகவே அறிய இயலும். சங்க இலக்கியப் பாடல்கள் தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன [1]. இயற்கையை புரிந்து கொள்ளுதல், இயற்கையோடு இயைந்து வாழ்தல், இயற்கையுடன் வினை புரிதல் ஆகிய பண்பாட்டுச் சூழலியல் கூறுகளை சங்க அகத்திணைப் பாடல்களான நற்றிணை பாடல்களில் பொருத்திப்பார்க்கிறது இக்கட்டுரை.

## சூழலியல் திறனாய்வு

சூழலியல் பார்வையில் சங்க இலக்கியங்களை ஆய்வு செய்வது என்பது இயற்கையை புரிந்து கொள்ளவும் சங்க காலத்து மக்கள் எவ்வாறு இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இயற்கையோடு இயைந்த வாழ்வை

மேற்கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிந்து கொள்ளவும் மிக இன்றியமையாததாக இருக்கிறது. .

வெப்ஸ்டர் என்ற அறிவியலார் "சூழலியல் என்பது உயிர்களுக்கும் அதனை சுற்றி உள்ள வாழ்விடத்திற்கும் இடையிலான பரஸ்பர வினை புரிதல் குறித்து பேசுவது"(பக்-25) என்கிறார்.

"மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் நேரிடையாக தனது செயல்பாடுகளால் சுற்றுச்சூழலோடு வினைபுரிவதன் மூலமாக தனது வாழ்வியல் முறையை மட்டுமின்றி அவ்வாழ்விடத்தில் உள்ள அனைத்து உயிர்களின் வாழ்க்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறான்" (பக்-57)
என்று தனது நூலில் குறிப்பிடுகிறார் ஜூலியன் ஸ்டுவர்ட் .

“சூழலியல் என்பது உயிரினங்களின் வாழ்க்கை, அவற்றின் தன்மை, நடத்தை மற்றும் வளர்ச்சி, மேம்பாடு ஆகிய அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பாதிப்பை உண்டாக்குகின்ற வெளிச்சக்திகள், நிலைமைகள் போன்ற யாவற்றையும் குறிக்கும்” (பக்-113) என்கிறார் சுற்றுச்சூழல் அறிஞர் டௌக்ளாங் ஹாலந்த்.

அறிவியல் கருத்தியலான சுற்றுச்சூழலையும், மொழி, வாழ்வியல் கருத்தியல்களைக் கொண்ட இலக்கியத்தையும் ஒருங்கிணைத்து செய்யப்படும் ஆய்வே சூழலியல் திறனாய்வு ஆகும் . இயற்கை ஒரு உயிர் பொருளாக நம் மேல் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறது அதை நாம் தவறாக பயன்படுத்தும் போது அது நமக்கு பெரும் ஆபத்தை கொண்டு வந்து கொடுக்கிறது. மனிதர்களின் வார்த்தைகளுக்கு வெளியே, பண்பாட்டுக்கு வெளியே இயற்கை என்பது தனியாக இயக்கம் கொண்டிருக்கிறது . மனிதர்கள் உட்பட அந்த இயற்கைக்குள் அடக்கம். அப்படி ஒரு காலத்தில் தூய்மையான இயற்கையோடு இருந்தவர்கள் தான் வரலாற்றுப் போக்கில் மாறி இயற்கையில் இருந்து விலகி இன்று பண்பாட்டு மனிதர்களாகி இருகிறார்கள் (பக்-354) என்கிறார் பஞ்சாங்கம்.

சங்ககாலத்தில் பழந்தமிழர் நிலங்களை ஐந்திணைப் பாகுபாட்டில் பகுத்து முதல்,கரு, உரிப் பொருட்களின் அடிப்படையில் தொகுத்தனர்.ஒரு நிலத்தின் இயல்புகளுக்கு ஏற்ற இயற்கை சூழலின் அடிப்படையில் அந்நிலத்தில் வாழும் உயிரினங்களின் வாழ்க்கை சுழற்சி அமைந்திருக்கும் என்பது இயற்கை விதி ஆகும். "மக்கள் குழுவாக சேர்ந்து வாழக் கூடிய இயற்கை சூழலே வாழிடம் எனப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட இன அல்லது சமூகமக்கள் ஒரு வட்டாரத்தில் வாழ்கின்றார்கள் எனில் அவ்வட்டாரத்திற்கென்றே உரிய பொருண்மையான சிறப்புக்கூறுகள் இருக்கும். அவ்வட்டாரத்திலேயே வாழக்கூடிய மக்களுக்கு போதுமான அளவிற்கோ தேவைக்கு அதிகமாகவோ கிடைக்க கூடிய வகையில் அப்பகுதிக்கே உரியனவாக இயற்கை வளங்கள் நிறைந்திருக்கும். அதன் தட்பவெட்ப

நிலை, கடல்மட்டம் ஏனைய நிலவியல் கூறுகள் ஆகியவற்றிற்கு ஏற்ப மக்கள் தங்களை தகவமைத்துக் கொண்டிருப்பார்கள்" (பக்-76)என்கிறார் ஆ.தனஞ்செயன்.
மனித வாழ்க்கைக்கு நிலமும் பருவமும் அங்கு வாழும் உயிரினங்களும் முக்கியம் என்று பழந்தமிழர் அறிந்திருந்தனர் [2, 3].

## அகப்பாடல்கள் காட்டும் இயற்கை வழி வாழ்வியல்:

அகப்பாடல்களில் தமிழர் வாழ்வு அனைத்தும் சூழல் அடிப்படையில் நிகழ்ந்ததாக காணமுடிகிறது. பின்வரும் நற்றிணைப் பாடல்கள் சங்க காலத்து மக்கள் இயற்கையோடு எத்தகைய புரிதலை கொண்டிருந்தனர் என்பதை விவரிக்கின்றன.

ஒரு உயிர் வாழ வேண்டுமானால் அதற்குத் தேவையான உணவு கிடைப்பது அவசியம். ஒரு உயிரின் உணவுப்பழக்கத்தை அறியும் போதுதான் அதன் உணவினை அழித்துவிடாமல் அதைக் காத்து அந்த உயிரினத்தை காப்பாற்ற முடியும். எனவே உயிர்களின் உணவுப் பழக்கம் பற்றிய பதிவுகள் மிக அவசியமாகிறது. நற்றிணைப்பாடல்களில் பல பாடல்கள் உயிர்களின் உணவுகள் குறித்து பேசுவது என்பது அவை அனைத்தையும் அம்மக்கள் அறிந்து வைத்திருந்தனர் என்பதையே காட்டுகிறது பின்வரும் நற்றிணைப் பாடல் அம்புபட்டு உதிர்ந்த குமிழ மரத்தின் கனிகளை மகிழ்ந்துண்ணும் மான்களை பதிவு செய்கிறது.

“அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
எறிமட மாற்கு வல்சியாகும்
வல்வில் ஓரி கானம் நாறி
இரும்பல் ஒலிவருங் கூந்தல்
பெரும் பேதுறவள் யாம் வந்தனம் எனவே.” (நற்- 6)

காட்டில் வல்வில் ஓரியின் அம்பு பட்டு குமிழ மரத்தின் கனிகள் உதிர்ந்து கிடக்கிறது அதனை மான்கள் உண்டு மகிழ்ந்து நிற்பதைப் போல் எவரேனும் சென்று யாம் வந்திருக்கிறோம் என்று தலைவியிடம் கூறினால் அவளும் மகிழ்ந்து மயங்கி நிற்பாள் என தலைவன் கூறுவதாக இப்பாடல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஓரியின் அம்பு போல தனக்கும் ஒரு தூதுவர் கிடைப்பாரா என்று ஏக்கத்துடன் நிற்கும் தலைவனின் நிலையை கூறுமிடத்து குமிழ மரத்தின் கனி மானுக்கு உணவாகும் என்ற செய்தியினையும் பதிவுசெய்கிறார் புலவர். இவ்வாறு தங்கள் வாழ்வின் ஒவ்வொரு செயலையும் இயற்கையோடு பொருத்திப் பார்ப்பதே சங்ககால மரபாய் இருந்திருக்கிறது. இப்பாடலில் வேட்டையாடும் நுட்பத்தையும் அறியமுடிகிறது. மானை வேட்டையாட சென்ற வல்வில் ஓரி

மான்களை கவர்வதற்காக குமிழ மரத்தின் கனிகளை உதிர்கிறான். அதனை அறியாத மான்கள் மகிழ்ச்சியுடன் அக்கனிகளை உண்ணும் பொழுது அதனை வேட்டையாடுதல் எளிதாகும். தலைவனும் தலைவியை மணந்து கொள்ளாமல் இரவுக் குறியில் வந்து புணர்ச்சியை வேண்டி நிற்கிறான். இதுவும் ஒருவிதமான வேட்டையே ஆகும். இப்படி எதை பதிவு செய்தாலும் அதை இயற்கையின் பின்புலத்திலேயே பதிவு செய்வதை மரபாக வைத்திருந்தனர் சங்க கால மக்கள்.

காட்டிற்குள் யானையின் வாழ்விடத்தையும் அது பயன்படுத்தும் வழித்தடத்தையும் அறிந்துகொள்ள இயற்கை சார்ந்த அறிவு இருந்தால் மட்டுமே அடையாளம் காணமுடியும். ஒரு விலங்கைப்பற்றி அறிந்துகொள்ள அதன் வாழ்வியல் முறையும் உணவு பழக்கத்தையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். சங்ககால மக்களுக்கு இந்த அறிவு இயல்பாகவே அமைந்து இருந்தது என்பதற்கு சான்றாக நல்வெள்ளியார் எழுதிய நற்றிணை பாடல் அமைகிறது,

“சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை அடுக்கத் தருவி யார்ப்பக்
கல்லலைத் திழிதருங் கடுவரற் கான்யாற்றுக்
கழைமாய் நீத்தங் காடலை யார்ப்பத்
தழங்குகுர லேறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி
வெண்ணெ லருந்திய வரிநுதல் யானை
தண்ணறுஞ் சிலம்பில் துஞ்சுஞ்
சிறியிலைச் சந்தின் வாடு பெருங்காட்டே” (நற் -7)

எனும் நற்றிணைப் பாடல் யானை மூங்கிலை தின்றுவிட்டு மகிழ்ச்சியுடன் உறங்கும். மலைப்புறம் சந்தன மரங்கள் நிறைந்த காடு. அங்கே பெரு மழை பொழிந்தால் அச்சந்தரும் ஆழமான சுனைகளில் நீர் நிறையும். மலைப்பக்கங்களில் அருவிகள் ஆர்ப்பரிக்கும் என்கிறது. இப்பாடலை வெறும் மழை குறித்த வர்ணனையாக மட்டும் கொள்ளாமல் காட்டில் ஒரு யானை உலாவும் சூழல் எப்படியிருக்கும் என்பதையும் அது உணவாக எதை உட்கொள்ளும் என்பதையும் யானைக் கூட்டங்களை மறைக்கும் அளவிற்கு காடுகள் இருந்தமையும் அக்காடுகளே அக்கால மழை வளத்திற்கு ஆதாரமாக இருந்ததையும் பேசுவதாகவே நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனித இனத்தின் நல்வாழ்வுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பேருதவி புரிவது காடுகள். ஒரு நாட்டின் இயற்கை வளம் என்பது அந்நாட்டிலுள்ள காடுகளின் வளத்தை சார்ந்தே அமைகிறது பின்வரும் நற்றிணைப் பாடல் சங்ககாலத்தில் காடுகள் எப்படி இருந்தன என்பதை சொல்வதோடு காடு குறித்தான தெளிவான அறிவு அம்மக்களுக்கு இருந்தது என்பதை விளக்குகிறது.

காடு என்பது செடிகளும் மரங்களும் மட்டுமல்ல அதில் எண்ணற்ற நுண்உயிர்களும் விலங்குகளும் அடங்கி இருக்கும் என்பதை தெரிந்தவர்களாக, இயற்கை நுட்பத்தை அறிந்தவர்களாக சங்ககால மக்கள் இருந்தனர் என்பதை இப்பாடல் தெளிவாக விளக்குகிறது.

பழங்களை உண்ணும் குரங்கினம், காட்டாற்றின் கரையில் நின்று நீரருந்தும் கலைமான், மூங்கில் புதர் நிழலில் குதித்து விளையாடும் மலையாட்டு கூட்டம், தினைப்புனத்தில் மேய வந்த காட்டு பன்றி வேட்டையாடும் புலி என்று ஒரு காட்டின் பல்லுயிர்ச் சூழலை கண்முன்னே விரித்து வைக்கிறது பெருங்குன்றூர்கிழார் எழுதிய குறிஞ்சி நிலப்பாடல்.

"தினையுண் கேழல் இரியப் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடா அர்
ஒண்கேழ் வயப்புலி படு உம் நாடன்
ஆர் தர வந்தன னாயினும் படப்பை " (நற்-119)..

மழைநீர் மருந்தாகும் என்பதையும் உணர்ந்தவர்களாக சங்ககால மக்கள் இருந்தனர் என்பதை விளக்குகிறது பின்வரும் நற்றிணைப் பாடல் நல்வேட்டனார் எழுதிய 53வது பாடல் மலைமுகடுகளில் வழியே ஓடி வரும் புதிதாக பெய்த மழைநீர் மருந்தாகும் எனக் குறிப்பிடுகிறது..

"ஆர்கலி வானந் தலைஇ நடுநாள்
கனைபெயல் பொழிந்தெனக் கானங் கல்லென்று
முளியிலை கழித்தன முகிழிணர் கொளவரும்
விருந்தின் தீநீர் மருந்தும் ஆகும் " (நற் -53)

காற்றில் மரங்கள்,காய்ந்த சருகுகள் பூங்கொத்துகளையும் அடித்துக் கொண்டு வருகின்ற புதிய இனிய நீரானது தலைவி உற்ற நோய் தீர்க்கும் மருந்து ஆகும் என்று விளக்கம் தரும் பாடல் இது.மழை நீரானது மனநோய்க்கு மருந்தாகும். மழைநீர் மிகுந்த குளிர்ச்சி உடையது தலைவனின் பிரிவால் வாடும் தலைவி குளிர்ந்த நீரில் நீராடினால் மன இறுக்கம் நீங்கி தெளிவடைவாள் என்று பதிவு செய்கிறது இப்பாடல்.

ஒரு இனத்தின் நாகரிகத்தின் பண்பாடு என்பது அதன் வாழ்க்கைச் சூழலை பொறுத்தும் அதில் கிடைக்கப் பெறும் வசதி வாய்ப்புகளைப் பொறுத்தும் அமைந்திருக்கும். மக்கள் பண்பாட்டில், நாகரீகத்தில் சிறந்து விளங்குவதற்கு அவர்களின் நிலச்சூழலியல் தகவமைவே முக்கிய காரணமாக அமைகிறது. நிலத்தில் வாழும் மக்களின் சூழலுக்கேற்ற வகையில் தங்கள் உணர்வுகள் உடல் தேவைகள் அமையும் என்பதை சூழல் உளவியல் என்கின்றனர் அறிஞர்கள். பின்வரும் பாடல் அத்தகைய உளவியலை நெய்தல் நிலத்தின் இயற்கை அமைப்போடு பேசுகிறது.

"நோயலை கலங்கிய மதனழி பொழுதின்
காமம் செப்பல் ஆண்மகன் கமையும்
யாமே பெண்மைதட்ப நுண்ணிதின் தாங்க
அவனே கைவல் கம்மியன் கவின்பெறக் கடைஇ
மண்ணாப் பசுமுத் தேய்ப்பக் குவியிணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன்
என்ன மகன்கொல் தோழி தன்வயின்
ஆர்வம் உடையராகி
மார்பணங் குறுநரை அறியா தோனே " (நற்.94)

கைத்தொழிலில் சிறந்த கம்மியன் கழுவித் தூய்மை செய்யாத முத்து தன் ஒளியை வெளியே விடாமல் தனக்குள் மறைத்து வைத்துக் கொள்ளுமோ அதுபோல பண்பாட்டின் காரணமாக என் காம நோயை என் மனதிற்குள் நான் மறைத்துக் கொண்டு உள்ளேன். ஆனால் என் காமமும் ஆழிப்பேரலை போன்றது. பேரலையை தடுத்து அமைதி அடையச் செய்யும் ஆற்றல் கடற்கரைச் சோலைக்கு உள்ளது போல என் காமத்தையும் அமைதி அடைய செய்யும் ஆற்றல் என் தலைவனுக்கு மட்டுமே உள்ளது என்று தன் தோழியிடம் தன் நிலையை உரைக்கிறாள் தலைவி.

ஆழிப்பேரலையை தாங்கி அவற்றை அமைதி அடையச்செய்யும் ஆற்றல் அலையாத்தி காடுகள் எனப்படும் கடற்கரைச் சோலைக்கு உண்டு என்ற செய்தியை தமிழர் அறிந்திருந்ததை இப்பாடல் உறுதி செய்கிறது. நெய்தல் நிலத்தின் கடற்கரைகளில் இருந்து சிறிது தொலைவில் அமைந்திருக்கும் கடற்கரைச் சோலையில் கழிமுகங்கள் உள்ள நீரில் நண்டுகள் வாழும். இவை இரவு நேரங்களில் மண்ணைக் கிளறி அங்கு காணப்படும் நுண்ணுயிர்களை இரையாகக் கொள்ளும். மாலை நேரங்களில் நண்டுகள் கரைகளில் ஊர்ந்து கொண்டிருக்கும் என்பதை அறிந்த தேரோட்டி தேரின் சக்கரத்தில் நண்டுகள் சிக்கி விடாதவாறு செலுத்த வெளிச்சம் தருவதற்காகவே நிலவு விரிந்தது என்கிறது பின்வரும் நற்றிணைப் பாடல்.

"புணரி பொருத பூ மணல் அடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பாய்ந்தூர நிலவு விரிந் தன்றாற் கானலானே " (நற்-45)

நண்டுகளின் உயிரைக் காப்பதற்காகவே நிலவு விரிந்தது போல் தலைவனும் உன்னை வந்தடைவான் என்று தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள் தோழி தங்களுடைய உணர்வுகளை தங்களைச் சுற்றியுள்ள இயற்கையோடு,உயிர்களோடு ஒப்புமைப்படுத்துவதே சங்ககால மக்களின் வாழ்வியலாக இருந்திருக்கிறது.

## முடிவுரை

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டு இருந்த காரணத்தினால் மட்டுமே அவர்களால் இயற்கையை முற்றாக உணர்ந்து கொள்ள முடிந்திருக்கிறது. இன்றைய நவநாகரீக சமூக மக்களோ இயற்கையை முற்றிலும் அழித்து விட்டு அதைப் பற்றிய புரிதல்கள் சிறிதும் இல்லாமல் இருப்பது மனிதகுல அளவிற்கு வழி வகுக்கிற ஒன்றாகவும் இருக்கலாம். இயற்கை வளங்களின் அழிவு என்பது மனித இனத்தின் அழிவையே அடையாளப் படுத்துகிறது.

### References

[1] Mark Q sutan, Introduction of cultural Ecology, AltaMira Press; Third edition (December 12, 2013).

[2] Nilakanta Sastri, K.A. (1955). A History of South India, OUP, New Delhi (Reprinted 2002).

[3] V.T. Ramasubramaniam, Natrinai (Moolamum Uraiyum) (Tamil) Hardcover –, Thirumagal Nilayam, (2009).

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License